செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-54 ஜூன் 2025



TNBEF 73வது ஸ்தாபன தினம் 9-6-2025

தோழர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்



நாடு தழுவிய பொது வேலை நிறுத்தம் 9-7-2025

அனைத்து தொழிற்சங்க அறைகூவல்

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் பங்கேற்பு

ஒன்றுபட்டு போராடுவோம்

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் 24ஆவது மாநில மாநாடு

மாநில மாநாடு ஜூன் 22 மற்றும் 23 தேதிகளில் சென்னையில் நடக்க உள்ளது. சுமார் ஆயிரம் தோழர்கள் தோழியர்கள் அனைத்து வங்கிகளில் இருந்தும் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் மாநாட்டில் கலந்துகொள்ள இருக்கின்றார்கள். மாநாட்டை வெற்றியாக்குவோம்

AIBEA மேனாள் பொதுச்செயலாளர்

தியாகத் திருஉருவம்

தோழர் தாரகேஸ்வர் சக்கரவர்த்தி

அவர்களின் 100வது பிறந்த நாள்

2-6-2025



அவரது நினைவை போற்றுவோம், அவர் வழி நடப்போம்

கரூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு : கரூர் மாவட்ட வங்கி ஊழியர் சங்க மாநாடு மே மாதம் 5ம் தேதி கரூரில் நடைபெற்றது. தோழர் E. அருணாச்சலம் மாநாட்டில் கலந்துகொண்டு மாநாட்டை துவக்கி வைத்தார். மாநாட்டின் முடிவில் தோழர் N.T.A. செல்வராஜ் (யூனியன் வங்கி) சேர்மனாகவும் தோழர் K. பாலகிருஷ்ணன் (கரூர் வைஸ்யா வங்கி) தலைவராகவும் தோழர் K. பிரசாந்த் (பேங்க் ஆப் இந்தியா) பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

திருச்சி மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு : திருச்சி மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் 20வது மாநாடு மே மாதம் 25ஆம் தேதி திருச்சியில் சிறப்பாக நடைபெற்றது. தோழர் CHV அவர்களும் தோழர் E.A அவர்களும் கலந்து கொண்டனர். பெருந்திரளாக தோழர்கள் மாநாட்டில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. மாநாட்டில் தோழர் G ராமராஜு சேர்மனாகவும், தோழர் J. அனந்தபத்மநாபன் (கனரா வங்கி) தலைவராகவும், தோழர் R. சிவபெருமாள் (பேங்க் ஆப் இந்தியா) பொதுச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்













தேனி மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு : தேனி மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் துவக்க மாநாடு தேனியில் மே மாதம் 27ஆம் தேதி நடைபெற்றது. சம்மேளனத்தின் சார்பாக தோழர் E.A மற்றும் தோழர் A. சிதம்பரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாநாட்டில் தோழர் G.S. ஜெயகிருஷ்ணன் (யூகோ வங்கி) தலைவராகவும், தோழர் B. ராதாகிருஷ்ணன் (யூனியன் வங்கி) பொதுச் செயலாளராகவும் மற்றும் தோழர் லட்சுமணன் (கனரா வங்கி) செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



கூட்டுறவு வங்கிச் செய்திகள்

- **18.05.2025 அன்று கோவை மாநகரில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்ற மகளிர் மாநாடு!**
- **மாநிலம் முழுவதிலிமிருந்து சுமார் 600 மகளிர்கள் பங்கேற்பு!**

தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த மாநில மகளிர் மாநாடு கடந்த 18.05.2025 அன்று கோவை பீளமேடு பகுதியில் மணி மஹால் அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது.

காலை 10.30 மணி அளவில் சங்க கொடியை AIBEA பொதுச் செயலாளர் தோழர் சி.எச். வெங்கடாசலம் அவர்கள் ஏற்றி வைத்தார். மாநாட்டின் துவக்கமாக குத்து விளக்கை நமது தலைவர்கள் ஏற்றி வைக்க, தலைவர் **தோழர் சி.எச். வெங்கடாசலம்** அவர்கள் தலைமையில் மாநாடு துவங்கியது.

கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத் தலைவர் தோழர் ஏ.வடிவேலு அவர்கள் வரவேற்புரையாற்றிட, தலைவர் அவர்கள் தமது தலைமை உரையில் மாநாடு நடத்தப்படுவதன் நோக்கம் குறித்தும், இந்திய சுதந்திரப் போராட்டம் போன்ற பல்வேறு இயக்கங்களில் பெண்கள் ஆற்றிய அரும்பணிகள் குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார்.





இம்மாநாட்டில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் தலைவர் **தோழியர் பி.பத்மாவதி Ex. MLA** அவர்கள் நமது கட்டமைப்பில் பெண்கள் எதிர்கொண்டுவரும்

பிரச்சனைகள் குறித்து விவரித்ததுடன் இந்திய மாதர் தேசிய சம்மேளனம் துவங்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை பெண்கள் முன்னேற்றத்திற்காக ஆற்றிவரும் பணிகள் குறித்தும் விளக்கினார். மேலும் நமது மாநிலத்தில் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் பெண்கள் எதிர்கொண்டுவரும் பிரச்சனைகள் குறித்து எடுத்துரைத்ததோடு அவற்றிற்கு தீர்வுகள் காண AIBEA தொழிற்சங்கத்தை மேலும் வலுவுள்ளதாக கட்டமைக்க பெண் தோழியர்கள் முனைந்து செயல்படவேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.



இம்மாநாட்டில் சிறப்புரையாற்றிய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் **தோழர் இ. அருணாச்சலம்** அவர்கள் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இம்மாநாட்டில் பெண்கள் பெருவாரியாக மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளதை வெகுவாக பாராட்டியதுடன் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் எதிர்கொண்டுவரும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவரித்தார். மேலும் கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ளது குறித்து எடுத்துரைத்து இப்பிரச்சனைக்கு தீர்வு காண தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வேலைநிறுத்தம் உள்ளிட்ட அனைத்து போராட்டங்களிலும் ஈடுபட முடிவெடுத்துள்ளதாக பலத்த கரவொலிகளுக்கிடையே தெரிவித்தார்.

அகில இந்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் **தோழர் கே.வி.எஸ். இரவிக்குமார்** அவர்களும் இம்மாநாட்டில் பங்கேற்று தனது வாழ்த்துக்களை தெரிவித்தார். அவர் தனது உரையில் நாடு முழுவதும் கூட்டுறவு வங்கிகளும், அதில் பணியாற்றும் ஊழியர்களும் எதிர்கொண்டுவரும் பிரச்சனைகள் குறித்து விவரித்தார். அதைத் தொடர்ந்து மாநில சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர்

ஜி.வைரப்பன் அவர்கள் தனது அறிக்கையை சமர்ப்பித்து கூட்டுறவு வங்கிகளில் மகளிர் தோழியர்கள் பெருமளவில் பணியாற்றி வருவதை குறிப்பிட்டு தொழிற்சங்க இயக்க நடவடிக்கைகளிலும், அதில் முடிவெடுக்கும் தலைமை பொறுப்பிலும் மகளிர் தோழியர்கள் இனி வரும் காலங்களில் அதிக ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டுமென்று வலியுறுத்தினார். மேலும் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பிரச்சனைகளையும், குறிப்பாக மகளிர் தோழியர்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகளையும் தனது அறிக்கையில் விரிவாக விளக்கியுள்ளது குறித்தும் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து 20க்கும் மேற்பட்ட மகளிர் பிரதிநிதிகள் கூட்டுறவு வங்கி ஊழியர்களின் பொதுவான பிரச்சனைகள் குறித்தும், மகளிர் தோழியர்களின் பிரத்யேகமான பிரச்சனைகள் குறித்தும் மிகச் சிறந்த முறையில் எடுத்துரைத்தனர்.

இம்மாநாட்டில் இறுதியாக உரையாற்றிய தலைவர் தோழர் சி.எச். வெங்கடாசலம் அவர்கள் பெண் தோழியர்களின் சிறப்பான பங்கேற்பிற்கு தனது பாராட்டுதல்களை தெரிவித்தார். கருத்தாழமிக்க அவரது உரையில் இன்று நாடெங்கும் தொழிற்சங்கங்கள் மீதும், தொழிலாளர் வர்க்கத்தின் மீதும் ஒன்றிய அரசு நடத்திவரும் தாக்குதல் குறித்து விளக்கினார். ஒரு புறம் கார்ப்ரேட் நிறுவனங்கள் அரசின் முழு ஆதரவோடு கொரோனா காலத்தில்கூட அடைந்துள்ள பெரும் வளர்ச்சியை எடுத்துரைத்ததுடன், மற்றொருபுறம் அரசின் பாரா முகத்தினால் ஏழை எளிய மக்கள் வறுமை கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருவதையும், உலகின் மிக அதிகமான ஏழைகள் வாழும் நாடாக இந்தியா உள்ளதையும் குறிப்பிட்டார்.

தொழிற்சங்கங்கள் தங்களது உரிமைகளை காத்துக்கொள்ள வரும் ஜீலை 9, 2025 அன்று நடத்தவுள்ள ஒருநாள் வேலைநிறுத்தத்தில் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் முழுவதுமாக கலந்து கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார். மேலும் கூட்டுறவு வங்கிகளில் தற்போது 2000-க்கும் மேற்பட்ட பணியிடங்களை நிரப்புவது, கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது, கூட்டுறவு வங்கிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் மறு முதலீட்டு நிதி வழங்கி அவற்றை பலப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டிட அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் என்றென்றும் உறுதுணையாக இருக்குமென்றும் தெரிவித்தார்.

மேலும் இனிவரும் காலங்களில் தொழிற்சங்க இயக்க பணிகளில் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் மகளிர் தோழியர்கள் அதிக ஈடுப்பாட்டுடன் செயல்பட்டு தலைமை பொறுப்புகளுக்கு வரவேண்டுமென்றும் அறிவுறுத்தி மாநாட்டில் நிறைவுரையாற்றினார்.

கூட்டுறவு வங்கிகளில் பணியமர்த்தப்பட்ட தகுதிகாண் பருவத்திலுள்ள மகளிர் தோழியர்களுக்கு மகப்பேறு விடுப்பு வழங்கிடவும், அதற்கான மருத்துவச் சலுகைகளை வழங்கிடவும் நிர்வாகங்கள் மறுத்துவருவது குறித்தும், கூட்டுறவு வங்கி கிளைகளில் மகளிருக்கு தனிக் கழிப்பறை கோரியும், வணிக வங்கிகளிலுள்ள மகளிருக்கான சிறப்பு விடுப்புகள் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் மகளிருக்கும் வழங்கக் கோரியும், SRB/ DRB மூலம் அயல் மாவட்டங்களில் பணியமர்த்தம் செய்யப்பட்ட தோழர்களை சொந்த மாவட்டத்தில் பணியமர்த்தக் கோரியும் மேலும் பொதுவான பல்வேறு பிரச்சனைகள் குறித்தும் 22 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இம்மாநாட்டில் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் மகளிர் தோழியர்களுக்கென மகளிர் குழு ஒன்று உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. **அக்குழுவிற்கு தோழியர் எஸ். காந்திமதி (முதன்மை மேலாளர், TNSC Bank) ஆலோசகராகவும், தோழியர் டீ. தேவிகலா (மேலாளர், TNSC Bank) அமைப்பாளராகவும் பணியாற்றுவார்கள்** என்றும் தலைவர் தோழர் சி.எச்.வெங்கடாசலம் அவர்கள் அறிவித்தார். மேலும் இணைப்பு சங்கங்கள் ஒவ்வொன்றும் தங்கள் சங்கத்திலிருந்து ஒவ்வொரு தோழியர்களை குழு உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இம்மாநாட்டையொட்டி கோவை PSG மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையிலிருந்து மருத்துவ முகாம் ஒன்று சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்மாநாட்டில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் 80வது நிறுவன நாளையொட்டி கோவை இராமகிருஷ்ணாபுரம் **அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகள் 80 பேருக்கு School Bag வழங்கப்பட்டது**. மாநாட்டின் நிறைவாக கோயம்புத்தூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க பொதுச் செயலாளர் தோழர் கணேஷ் ராம்குமார் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இம்மாநாட்டிற்கான ஏற்பாடுகளை கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கூட்டுறவு வங்கி தோழர்கள், வீட்டு வசதி சங்கத் தோழர்கள் ஆகியோர் தோழர் ஏ.வடிவேலு அவர்கள் தலைமையில் சீரிய முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்க தலைவர்களும் மாநாட்டு பணியில் முனைந்து செயல்பட்டு மாநாடு சிறப்புடன் அமைய உறுதுணையாக இருந்தனர்.



TNBEF 24வது மாநாடு - ஜூன் 22 மற்றும் 23, 2025

சென்னையில் சங்கமிப்போம்